## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
### வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
### (20.12.2023 முதல் 24.12.2023)

**அறிக்கைஎண் 0101/2023** **தேதி.19.12.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 08°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 15.12.23 முதல் 18.12.23 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 23°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 96 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 61 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7-15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (15.12.2023 முதல் 18.12.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 24.12.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15/12 | 16/12 | 17/12 | 18/12 | தேதி | நாள்-1 20/12 | நாள்-2 21/12 | நாள்-3 22/12 | நாள்-4 23/12 | நாள்-5 24/12 |
| 0.0 | 0.0 | 0.3 | 16.9 | மழை (மி.மீ) | 5 | 1 | 1 | 0 | 0 |
| 29 | 30 | 30 | 28 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 26 | 26 | 27 | 27 |
| 20 | 21 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 23 | 23 | 24 | 24 |
| 7 | 6 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 5 | 4 | 5 |
| 84 | 83 | 86 | 96 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 80 |
| 62 | 61 | 91 | 83 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 50 | 40 | 50 |
| 10 | 7 | 15 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 10 | 10 | 10 | 10 |
| 70 | 90 | 70 | 70 | காற்றுவீசும் திசை | 70 | 90 | 110 | 90 | 90 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (20.12.2023 முதல் 24.12.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 20.12.2023, 21.12.2023 மற்றும் 22.12.2023 ஆகிய தேதியில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 25°செ முதல் 27°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக

வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு**

| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **20-12-2023** | 3.0 | 3.0 | 2.0 | 2.0 | 2.0 | 3.0 | 3.0 | 3.0 | 3.0 | 3.0 | 2.0 | 3.0 | 2.0 |
| **21-12-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **22-12-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **23-12-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **24-12-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் தூறல் (அ) லேசானமழை மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது. ஒத்தி வைத்த உரமிடல், மருந்து தெளித்தல் மற்றும் களை எடுத்தலை முடிக்கவும். |
| நெல் | வளர்பருவம் | நிலவும் வானிலையில் நெற்பயிரில் நெல்பழநோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு ஆராய்ந்து தாக்குதல் தென்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1மிலி புரோபிகோனோசோல் அல்லது 1 மிலி ஹெக்சாகோனோசோல் அல்லது காப்பர் ஆக்சிகுளோரைடு 2.5கி அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 2.5கி கலந்து தெளிக்கவும். தேவைப்பட்டால் 15 நாட்களுக்கு பிறகு மறுமுறை தெளிக்கவும்.<br>நெல்லில் குலைநோய் வருவதற்கான சாதகமான காலநிலை இருப்பதால் விவசாயிகள் வயலை நன்கு கவனித்து தாக்குதல் தென்பட்டால் முதலாவதாக ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் டிரைசைக்ளோசோல் என்ற அளவிலும் இரண்டாவது முறையாக ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் கார்பன்டசிம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.<br>அதிகமான ஈரப்பதத்துடன் கூடிய குறைந்த வெப்பநிலை காணப்படுவதால் நெற்பயிர்களில் பாக்டீரியல் இலைக்கருகல் நோய் வர வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்ளின் 300 கிராம் + காப்பர் ஆக்சிகுளோரைட் 1250 கிராம் / எக்டருக்கு அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 2கி/லி கலந்து தெளிக்கவும். தேவைப்பட்டால் 15 நாட்களுக்கு பிறகு மறுமுறை தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| தென்னை | | தென்னை மரத்திற்கு இரண்டாவது முறையாக யூரியா 650 கிராம், சூப்பர் பாஸ்போட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ கலந்து இடுவதற்கு இதுவே தகுந்த தருணமாகும். |
| கால்நடைகள் | | பருவ மழை காலங்களில் தொடர்ந்து மழை பெறப்படுவதாலும், புதிதாக முளைத்து வரும் புற்களை கால்நடைகளுக்கு கொடுப்பதாலும் செம்மறிஆடு, ஆடு, மாடு மற்றும் கறவைமாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யவும்.<br>பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை மிகவும் குறைந்து காணப்படுவதால் கோழிக்குஞ்சுகளுக்கு போதிய வெப்பம் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவும். |

**குறுஞ்செய்தி**

- பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை மிகவும் குறைந்து காணப்படுவதால் கோழிக்குஞ்சுகளுக்கு விளக்குகள் மற்றும் சணல்சாக்கு தடுப்பிகள் மூலம் போதிய வெப்பம் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ளவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**